உ

# தீபாவளிப் பண்டிகை

## ஏன் கொண்டாடுகிறோம்?

## எப்படிக் கொண்டாட வேண்டும்?

தொகுப்பு : இல. சின்னையா,

Hp: 016 3411982 WhatsApp: 016 9237764

email : sinniah41@hotmail.com )

# நாள் / நேரம்

## கேள்வி 1.

**தீபாவளி எந்தத் தமிழ் மாதத்தில் கொண்டாடப்படும்?**

## பதில்.

**ஐப்பசி மாதத்தில்.**

**(ஆங்கிலம்: அக்டோபர்/நவம்பர் மாதங்கள்).**

## கேள்வி 2.

**அது எந்தத் திதியில் கொண்டாடப்படும்?**

## பதில்.

**ஐப்பசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் கொண்டாடப்படும்.**

## கேள்வி 3.

**‘இந்த நாளில்தான்
தீபாவளியைக் கொண்டாட வேண்டும்’
என்று எப்படித் தீர்மானிப்பது?**

**பதில் 3.**

**ஐப்பசி மாதத்தில் தேய்பிறையில்
எந்த நாளன்று பிரம்ம முகூர்த்தத்தில்
(அதிகாலை சுமார் 4- 5 மணி அளவில்)
சதுர்த்தசி திதி இருக்கின்றதோ,
அந்த நாள்தான் தீபாவளி ஆகும்.**

## கேள்வி 4.

தீபாவளி எந்த நேரத்தில் கொண்டாடப்படும்?

**பதில்.**

அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டு,

காலையில் தீபாவளியைக் கொண்டாட வேண்டும்.

## கேள்வி 5.

அப்படியானால், தீபாவளியை அமாவாசையில் கொண்டாடக் கூடாதா?

## பதில்.

சதுர்த்தசிக்கு அடுத்த திதி அமாவாசைதான்!

எனவே,

தீபாவளிக் கொண்டாட்டங்கள் அமாவாசையில்தான் அமையும்.

## கேள்வி 6.

**சதுர்த்தசி திதி வரும் அந்தப் பிரம்ம முகூர்த்த நேரத்தில் மட்டும்தான் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டுமா?**

## பதில்.

**ஆம். அதனால்தான் அதற்கு 'நரக சதுர்த்தசி ஸ்நானம்' என்று பெயர்.**

# “ தீபாவளி ”

## இதன் அர்த்தம் என்ன?

**கேள்வி 7.**

**‘தீபாவளி’ – இதனை எப்படிப் பிரிப்பது?**

**பதில்.** **தீபம் + ஆவளி**

**கேள்வி 8.**

**‘தீபம்’ என்றால் என்ன?**

**பதில்.** **ஒளி அல்லது விளக்கு.**

**கேள்வி 9.**

**‘ஆவளி’ என்றால் என்ன?**

**பதில்.** **வரிசை.**

**கேள்வி *10.***

**‘ஒளி’ யின் தன்மை என்ன?**

**அது எதற்கு அடையாளம்?**

**பதில்.**

**ஒளியானது, இருளை அகற்றி வெளிச்சமாக்கும்.**

## கேள்வி 11.

‘இருளை அகற்றுதல்’ என்றால் என்ன?

## பதில்.

கெட்ட குணங்கள், கெட்ட எண்ணங்கள், கெட்ட நடத்தைகள்:

இவை இல்லாமல் செய்தல்.

## கேள்வி 12.

**அப்படியானால்,**

**‘தீபாவளி’ என்றால் என்ன அர்த்தம்?**

## பதில்.

**நம்மிடமுள்ள அசுர குணங்களை விரட்டிவிட்டு,**

**நமது மனதில் நல்ல எண்ணங்களை ஏற்றி வைத்தல்**

**என்று அர்த்தம்.**

**கேள்வி 13.**

**நமது மனம் சுத்தமானால், அங்கே யார் குடியேறுவார்?**

**பதில்.**

**சீதேவி என்ற மகாலட்சுமி.**

**கேள்வி 14.**

**நமது மனம் அசுத்தமாக இருந்தால், அங்கே யார் குடியிருப்பார்?**

**பதில்.**

**மூதேவி.**

**கேள்வி 15.**

**நமக்குத் தேவை**

**மூதேவியா? சீதேவியா?**

**பதில்.**

**சீதேவி.**

## கேள்வி 16.

**அவ்வாறென்றால்,**

**தீபாவளி அன்று யாருக்குப்**

**பிரார்த்தனை செய்ய வேண்டும்?**

## பதில்.

**ஸ்ரீதேவி என்ற மகாலட்சுமிக்கு.**

## கேள்வி 17.

**தீபாவளி அன்று**
**மகாலட்சுமி பூஜை செய்யவேண்டும்**
**என்பதற்கு**
**என்னென்ன காரணங்கள் உண்டு?**

**பதில். *i* :**

**நரகாசுரப் போரின்போது,**
**கிருஷ்ணர் மயங்கி சாய்ந்த சமயம்,**
**சத்தியபாமா என்ற மகாலட்சுமியே**
**நரகாசுரனை வதம் செய்தார்.**
**எனவே,**
**தீபாவளி,**
**வீரலட்சுமியின் வெற்றித் திருநாள்.**

பதில் *ii* :

ஐப்பசி தேய்பிறைச் சதுர்த்தசி/அமாவாசை அன்று,
மகாலட்சுமி
பாற்கடலில் அவதாரம் செய்த நாள்.
எனவே,
தீபாவளி,
மகாலட்சுமியின் அவதார நாள்.

## பதில் *iii :*

**தீபாவளி அன்று**
**விளக்கிலும் எண்ணெயிலும் வெந்நீரிலும்**
**மகாலட்சுமி வாசம் செய்கிறாள்.**
**எனவே,**
**தீபாவளி,**
**இலட்சுமி கடாட்சம் நிறைந்த நாள்.**

## பதில் *iv* :

நரகாசுரன் என்ற கெட்டதை
கிருஷ்ணர் என்ற நல்லது
வெற்றி கொண்ட நாள் அது.
நல்லது என்ற தர்மம்
கடைசியில் நிச்சயம் வெற்றி பெறும்;
கெட்டது என்ற அதர்மம்
நிச்சயம் அழிந்தே போகும்.

இந்த உண்மையை
நமது மனதில் பதியச் செய்யும் நாள்தான்
தீபாவளி.

தங்கள் கவனத்திற்கு :

இந்த தீபாவளி அமாவாசை நாளானது,

பித்ரு தர்ப்பணம் செய்வதற்கு ஆனது அல்ல.

இது குதூகலமாக கொண்டாடப்பட வேண்டிய தினம்.

(தெய்வத்தின் குரல் – காஞ்சி மகா பெரியவா).

## தீபாவளி கொண்டாடுவோம்!

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும்
பெற்றோர்களோடு ஒன்றாக இணைவோம்!

முதல்நாள் முன்னோர்களுக்குப் படையல் போட்டு,
அவர்களின் ஆசியைப் பெறுவோம்!

அதிகாலையில் எண்ணெய் தேய்த்து
வெந்நீரில் ஸ்நானம் செய்வோம்!

***பெரியோர் பாதம் பணிந்து,***
***அவர்களின் ஆசியைப் பெற்று,***
***அவர்கள் கையால் புத்தாடைகள் பெற்று,***
***அழகாக அணிந்து, பொலிவோடு திகழ்வோம்!***

அனைவரும் அமர்ந்து,
ஆதிசங்கரர் அருளிய
‘கனகதாரா ஸ்தோத்திரம்’ பாடி
இலட்சுமி பூஜை செய்வோம்!

இயன்ற பணத்தை பூஜையில் வைத்து
பிறகு அதைக்  கல்விக்குத் தானம் செய்வோம்!

*ஒன்றாக கீழே அமர்ந்து*
*புதிய பலகாரங்கள் உண்டு களிப்போம்!*
*பக்கத்து வீட்டுக்காரரர்களுக்கும் பலகாரம் அளித்து*
*தீபாவளி வாழ்த்து கூறுவோம்!*
*குழந்தைகளை மகிழ்விப்போம்! முதியவர்களைச்*
*சந்தோஷப் படுத்துவோம்!*

*T.V முன் அமர்ந்து*
*படம் பார்த்து பல மணி நேரம்*
*வீணாக்குவதை விட்டு விடுவோம்!*
*அந்த நேரத்தில் பிள்ளைகளுடன் விளையாடுவோம்!*

*பெற்றோர்கள் எவ்வளவு பாடுபட்டு*
*நம்மை வளர்த்தார்கள் என்பதை*
*அவர்களே சொல்லத் தூண்டுவோம்!*
*அவர்கள் காலடியில் அமர்ந்து செவிமடுப்போம்!*

***உறவினர்களைச் சென்று பார்ப்போம்!***

***நண்பர்களைச் சந்தித்து***

***அளவளாவுவோம்!***

***பல்லின மக்களை***

***வரவேற்று உபசரிப்போம்!***

**தத்துவங்களை அறிவோம்!     வாழ்வில் கடைபிடிப்போம்!**

**உயர்வோம்!**

**இன்பமே சூழ்க, எல்லாரும் வாழ்க!**

நன்றி : இக்கருத்துக்கள் அனைத்தும்,

மலேசிய இந்துதர்ம மாமன்ற தேசிய குருக்கள்

சிவஸ்ரீ அ.ப. முத்துக்குமார சிவாச்சாரியார் அவர்களின்

சமயப் பேருரைகளிலிருந்து தொகுக்கப் பெற்றவை.

அன்னாரின் பாதகமலங்களுக்கு அடியேனின் பணிவார்ந்த

வணக்கம் உரித்தாகுக!

**இல.சின்னையா**